**Dinakaran**




வேலம்மாள் தொழில் நுட்ப கல்லூரியில் நடந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக விழாவில் கலந்து கொண்ட விப்ரோ டெக்னாலஜிஸ் தேசிய தொழில் நுட்ப குழும தலைவர் வி.விஸ்வநாதனுக்கு வேலம்மாள் குழும தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் நினைவு பரிசு வழங்கினார். அருகில் கல்லுரி துணை முதல்வர் டாக்டர் சவுந்தரராஜன், ஆலோசகர் ரசாக் ஆகியோர் உள்ளனர் .

# வேலம்மாள் முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு

பொன்னேரி, ஆக. 5: பொன்னேரி அடுத்த பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்கள் அறிமுக விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

விழாவிற்கு வேலம்மாள் கல்விக்குழுத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரி இயக்குநர் எம்.வி.எம்.சசிகுமார், ஆலோசகர் ரசாக், நிர்வாக இயக்குநர் வீராவேல்முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் டாக்டர் சவுந்தர்ராஜன் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தேசிய தொழில்நுட்ப குழும விப்ரோ டெக்னாலஜிஸ் தலைவர் விஸ்வநாதன் கலந்து கொண்டு, மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை பற்றி விளக்கினார். கல்விக்குழும தலைவர் முத்துராமலிங்கம், மாணவர்களின் கல்வித்திறன், தன்னம்பிக்கை, பேச்சு, வேலைவாய்ப்பை எளிதாக பெறுவது குறித்து ஆலோசனை வழங்கினார். கணிதத்துறை தலைவர் பாலமுருகன் நன்றி கூறினார்.

# Day makkal

# வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் முதலாண்டு மாணவர்கள் அறிமுக விழா

சென்னை, ஆக 5–

பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்களின் அறிமுக விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு கல்வி குழுமத்தின் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். தொழில்நுட்ப கல்வி இயக்குனர் எம்.வி.எம். சசிக்குமார், ஆலோசகர் ரசாக், நிர்வாக இயக்குனர் வீரவேல் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி துணை முதல்வர் எஸ். சௌந்திரராஜன் வரவேற்றார்.




விழாவில் தேசிய தொழில்நுட்ப குழுமம் விப்ரோ டெக்னாலஜீஸ் தலைவர் தலைமை விருந்தினராக வி.விஸ்வநாதன் கலந்து கொண்டு கல்லூரி வாழ்க்கையில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்து விளக்கிப் பேசினார்.

விழாவில் வேலம்மாள் கல்வி குழுமத்தின் தலைவர் எம். வி.முத்துராமலிங்கம் கல்வி திறன், தன்னம்பிக்கை, பேச்சு ஆளுமைத் திறன் உள்ளிட்டவற்றை மாணவர்கள் வளர்த்து கொள்வது பற்றியும் வேலை வாய்ப்பை எளிதாக பெற வளர்த்துக் கொள்ள வேண்டிய திறமைகள் குறித்து விளக்கி மாணவர்கள் மேலும் மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்திப் பேசினார். கணிதத்துறை தலைவர் பாலமுருகன் நன்றி கூறினார்.

விழாவில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.